---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் மற்றும் மைதான முன்பதிவு வருமானம் ரூபா 3.6 மில்லியன், மீளாய்வாண்டின் வருமானத்தில் எடுக்கப்பட்டிருந்தமையால் வருமானம் அந்த அளவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | உறுப்பினர் கட்டணம் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் திருத்தப்படுவதறகான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 18 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதியின் பிரகாரம் பணக் கொடுக்கல் வாங்கல் மட்டுமே காசுப்பாய்ச்சல் கூற்றில் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் , ரூபா 50 மில்லியன் பெறுமதியான விளையாட்டு விடுதி அமைச்சின் மூலம் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக காசுப்பாய்ச்சல் கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படுகின்றேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | சுமார் 11 ஆண்டுகளாக காணப்பட்ட ரூபா 9.3 மில்லியன் ஆன மீள்மதிப்பீட்டு மிகை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் பற்றாக்குறைக்கு மாற்றப்படுவதற்கு அல்லது மிகையிலிருந்து ஒரு பகுதியொன்று | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் செய்யப்படுகின்ற மீள்மதிப்பீடு மூலம் ஏற்படும் குறைபாடு அல்லது மிகை இம்மீதியினூடாக சீராக்கப்பட்டு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திரட்டப்பட்ட மிகைக்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்படுவதறகான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் முழுமையாகத் தேய்மானமிடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்த கிரயம் ரூபா 756 மில்லியன் ஆன சொத்துக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். தற்போது மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2023 யூன் 30 வரை முடிக்கப்பட்டு அப்பெறுமதிகள் பத்தகங்களில் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்தொன்று பயன்பாட்டிற்கு ஏற்றதான திகதியிலிருந்து தேய்மானக் கணக்கீடு தொடங்கப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையால் 2022 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக முழு ஆண்டிற்குமான தேய்மானச் செலவாக ரூபா 5.6 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 4.3 மில்லியன் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எங்கள் அதிகார சபையால ஒரு சொத்தைப் பெற்ற ஆண்டில், அந்த ஆண்டிற்கான முழு தேய்மானம் கணக்கிடப்படுவதுடன் , அச்சொத்து அகற்றப்பட்ட ஆண்டிற்கான தேய்மானம் கணக்கிடப்பட மாட்டாது. இது சம்பந்தமாக, நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் தொடர் இலக்கம் 03 இல் 3.1.4 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இன் நிதி நிலைமைக் கூற்றில் ஓய்வூதிய நலன் பொறுப்பு ரூபா 87.5 மில்லியன காட்டப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையின் படி ரூபா 90.5 மில்லியன் ஆக இருந்தமையால், நடைமுறையல்லாப் பொறுப்பு ரூபா 3 மில்லியன் குறைவாகவும் மற்றும் ஓய்வூதியப் நலன் | 2023 ஆம் ஆண்டின் கணக்கு குறிப்புக்களில் திருத்தப்படுவதறகான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புகளுக்கான ஒதுக்கீட்டுச் செலவு அந்த மதிப்பால் குறைவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற முடிவுறா வேலைகளில் உள்ளடக்கப்படடுள்ள கிரயம் ரூபா 136 மில்லியன் ஆன 05 செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 3 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. இறுதி பற்றுச்சீட்டுக்கள் மற்றும் பிடிகாசு என்பன விடுவிக்கப்படுவதற்கு உள்ளன. அந்த பற்றுச்சீட்டுக்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் வேலை நிறைவுச் சான்றிதழ் பெறுவதற்கு முடியுமென்பதுடன் அச்சான்றிதழின் அடிப்படையில் முடிவுறா வேலைகள் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு மூலதனமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்ட நாளிலிருந்து தேய்மானம் சரியாக கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 9 வருட காலமாக காணப்படுகின்ற பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி ரூபா 3.3 மில்லியன் அறவிடப்படுவதற்கு அல்லது கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவை தொடர்பான பழைய தகவல்களைக் கண்டுபிடிக்க முடியாததால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடிய பின்னர் எதிர்காலத்தில் திருத்தப்படுவதறகான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் காணப்பட்ட 2007 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற ரூபா 26 மில்லியன் பெற வேண்டிய வியாபார மீதி அறவிடப்படுவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படுகின்றேன். | நீண்ட காலமாக காணப்படுகின்ற பெற வேண்டிய தொகையைப் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய பெற வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 22 | 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக | நீண்ட காலமாக காணப்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் மூலதன முற்பண மீதியில் 2017 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற ரூபா 11 மில்லியன் ஆன மீதியொன்று மற்றும் 05 வருடங்களாக காணப்பட்டு வருகின்ற ரூபா 157,678 ஆன மீதியொன்றும் இருந்தன. | திருத்தம் செய்யப்படும். | பெற வேண்டிய தொகையை் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார செலுத்த வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான மொத்த மதிப்பு ரூபா 476,239 ஆன பொறுப்புக்கள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படுகின்றேன். அதிகாரசபையின் ஒப்பந்த செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக இந்த கட்டணம் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்கள் தற்போது திருத்தப்பட்டுள்ளன. | பொறுப்புக்கள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 2014 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற ரூபா 86.9 ஆன பிடிகாசு மீதியைத் தீர்க்கப்பதற்கான நடவடிக்கை அதிகாரசபையினால் எடுக்கப்படவில்லை. | 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக திருத்தம் செய்யப்படும். | பிடிகாசு மீதிகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிபபிரமமாணம் 880 மற்றும் 891(1) | பணத்திற்கு பொறுப்பான அதிகாரிகளிடம் பிணை பெறுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை மற்றும் பிணைப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | இந்தச் செயல்முறையின் ஆரம்பப் பணிகள் முடிந்துள்ளதுடன் , பத்திரம் 2023 திசெம்பர் 31 இல் பிணைப் பதிவேடு புதுப்பிக்கப்படும் என்றும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதிப்பிரமமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 93.8 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 16.2 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 110 மில்லியன் ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு வருமான மானியங்கள் குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்ட ஒப்பந்த மதிப்பு ரூபா 49.8 மில்லியன் ஆன சுகததாச வெளி விளையாட்டரங்கின் பிரதான நுழைவாயில் மற்றும் இரும்பு வேலி நிர்மாணத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் கட்டப்பட்டது மற்றும் 2020 மே 10 இல் முடிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக ரூபா 31.7 மில்லியன் செலவிடப்பட்டு 03 வருடங்களுக்கு மேலாகியும் பணிகள் நிறைவு பெறவில்லை. | சில இறுதிப் பணிகள் மீதமுள்ளதால், பிடிகாசு விடுவிக்கப்படவில்லை. 2023/12/31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக மூலதனமாக்கப்பட்டு திருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். | கட்டுமானப் பணிகள விரைவில் முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.- |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் பிரதான நீச்சல் தடாகம் மற்றும் சுழியோட்டக் குளத்திற்காக நிறுவப்பட்ட நீரேற்று நிலையம் 2010 ஆம் ஆண்டிலிருந்து திருத்தப்படவில்லை. 2020ஆம் ஆண்டு முதல் இந்த நீரேற்று நிலையத்தை திருத்தம் செய்ய வேண்டிய | உடன்படுகின்றேன். 2021 ஒதுக்கங்கள் ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டு மூலதன ஒதுக்கீட்டில் இருந்து செய்யப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | திருத்த நடவடிக்கை விரைவில் முடிக்கப்பட வேண்டும்.- |

| | | | |
|---|---|---|---|
| | தேவையொன்று இருந்தபோதிலும், திருத்தம் செய்யப்படாமையால் நீர் கசிவு ஏற்பட்டதால் பராமரிப்புச் செலவும் அதிகரித்துள்ளது. ஆனால் நிறுவனம் இன்னும நீரேற்று நிலையத்தை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அதிகார சபையின் சிறுவர் நீர்த் தடாகம் நீரில் மூழ்கி கிடப்பதால், பயிற்சிகளுக்காக பயன்படுத்தப்படாததுடன் அது இதுவரை திருத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். தற்போது திருத்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன, எதிர்காலத்தில் குறைபாடுகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திருத்த நடவடிக்கை விரைவில் முடிக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நடைபெற்று வரும் வேலைகளில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 18 மில்லியன் கிரயமான சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2019 செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 திசெம்பர் 18 அன்று முடிக்கப்பட்டிருக்க வேண்டும். நாட்டில் நிலவும் கோவிட் 19 தொற்று நிலைமை, மூலப்பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் காலநிலை காரணமாக, ஒப்பந்த காலம் சம்பந்தப்பட்ட ஆலோசனை நிறுவனத்தால் 2021 | இத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாக ஒப்பந்தங்கள் தற்போது இரத்து செய்யப்பட்டுள்ளன. 2023 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்காக திருத்தங்கள் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தின் கட்டுமானப் பணிகள விரைவில் முடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 21 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது, ஆனால் இந்த திட்டத்தின் கட்டுமான பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகாரசபையின் காற்பந்து மைதானம் திருத்தம் மற்றும் மேம்படுத்தல் ஒப்பந்தம் ரூபா 32 மில்லியனிற்கு (வரி நீங்கலாக) தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதால் விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டடுள்ளது. ஒப்பந்ததாரரிடம் குறிப்பிட்டு குறைகளைச் சரி செய்வதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் ரூபா 38 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் தோல்விக்கு காரணமான தரப்பினர் கண்டறியப்படாமலும், நட்டத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | உடன்படுகின்றேன். விளையாட்டு மைதானத்தின் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. விளையாட்டு மைதானம் அனைத்து பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்கும் ஒதுக்கப்பட முடியும். | முறையாக செயற்திட்ட முகாமைத்துவம் செய்யப்பட்டு எதிர்பார்த்த நிர்மாணத்தை முறையாக செய்து காலதாமதமின்றி கட்டி முடிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில், 04 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 37.6 மில்லியன் உரிய செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் அந்த ஆண்டிலிருந்து நடப்பாண்டு வரையில் தக்கவைக்கப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். இந்த செயற்திட்டங்களின் கட்டுமானத்தில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டு பணம் செலுத்தப்பட்ட பிறகு, நாளேட்டுப் பதிவுகள் மூலம் திருத்தங்கள் செய்யப்படும். | மூலதன செயற்திட்டங்கள் காலதாமதமின்றி முடிக்கப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிக்கோவையின் | உடன்படுகின்றேன். விளையாட்டுப் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| பிரிவு 2.6.1(II) இன் படி, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சமமான நிலையில் போட்டியை ஊக்குவிக்க முடியுமான வகையில் சான்றுப்படுத்தப்பட்ட விவரக்குறிப்புகளை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும் , அதிகாரசபையால் ரூபா 33.6 மில்லியன் விளையாட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டபோது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொருட்களை வாங்கும் போது பெறுகை செயல்முறை பின்பற்றப்பட்டுள்ளது. ஆனால் பணம் செலுத்தும் போது பொருட்களில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக பணம் செலுத்தப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பெறுகை வழிகாட்டிக்கோவையின் பிரிவு 4.2.2 (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் படி, பெறுகை காலக்குறிப்பொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக பெறுகை காலக்குறிப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை காலக்குறிப்பொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 379 ஆகவும், உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 288 ஆகவும், 2022 திசெம்பர் 31 இல் வெற்றிடங்களின் எண்ணிக்கை 91 ஆகவும் இருந்தன. அந்த வெற்றிடங்களில் உள்ளடங்கிய நிறுவனத்தின் செயல்திறனை அதிகரிப்பதற்காக முடிவெடுக்கும் பணிகளுக்கு நேரடியாகப் பங்களிக்கின்ற அதிகாரசபையின் சிரேஷ்ட அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளில 05 பதவிகள் அதாவது 50 சதவீதமான வெற்றிடம் காணப்பட்டது. | அதிகாரசபையின் பதவியணியில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு மற்றும் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அதிகாரசபையின் செயலாற்றலுக்கு உதவும் வெற்றிடங்களை நிரப்பப்படுவதற்கு மற்றும் பதவியணியின் தேவைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு நடைமுறையை திருததுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |